# April 16, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நாடாளுமன்ற நடப்பு பட்ஜெட் கூட்டத் தொடரின் நீட்சியாக, வியாழக்கிழமை (ஏப்.16) முதல் மூன்று நாள்களுக்கு சிறப்பு அமர்வு நடைபெறவுள்ளது.

(i) மக்களவை-பேரவைகளில் 33 சதவீத மகளிர் இடஒதுக்கீட்டை 2029-ஆம் ஆண்டு முதல் அமலாக்கவும், அதற்கு ஏதுவாக மொத்த மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 543-இல் இருந்து 850 வரை அதிகரிக்கவும் வகை செய்யும் அரசமைப்புச் சட்டத்தின் 131-ஆவது திருத்த மசோதா உள்பட மூன்று மசோதாக்களை அறிமுகம் செய்து, விவாதித்து நிறை வேற்றும் நோக்கில் இந்த அமர்வு நடைபெறுகிறது.

(ii) மகளிர் இடஒதுக்கீட்டின் பின்னணியில், மத்திய அரசு முன்மொழிந்துள்ள தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கைக்கு எதிர்ச் எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை பதிவு செய்துள்ளன. குறிப்பாக, மக்கள்தொகையை சிறப்பாக கட்டுப்படுத்திய தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் குறையக்கூடும் என பலத்த எதிர்ப்பு கிளம்பியுள்ளது.

(iii) இந்த பரபரப்பான சூழலில், நாடாளுமன்ற சிறப்பு அமர்வு பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

(iv) மக்களவை-பேரவைகளில் மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் சட்டம் கடந்த 2023- இல் நிறைவேற்றப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி, புதிய மக்கள்தொகை கணக்கெடுப்புக்குப் பிந்தைய தொகுதி மறுசீரமைப்புக்குப் பிறகே மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்த முடியும். அதாவது, 2027 மக்கள்தொகை கணக்கெடுப்பு அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்புப் பணி நிறைவடைந்த பிறகே மகளிர் இடஒதுக்கீட்டை அமலாக்க முடியும் என்பதால், 2034-க்கு முன்பு அமலாக்க முடியாத நிலை இருந்தது.

(v) மத்திய அரசு தீவிரம்:

- இந்தச் சூழலில், 2029 பொதுத் தேர்தல் முதல் மகளிர் இடஒதுக்கீட்டை அமலாக்க முடிவு செய்துள்ள மத்திய அரசு, இது தொடர்பான அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதா மற்றும் பிற மசோதாக்களைக் கொண்டுவந்து நிறைவேற்ற தீவிரம் காட்டி வருகிறது.
- மத்திய அரசால் வெளியிடப்பட்ட வரைவு அரசமைப்புச் சட்டத் திருத்த மசோதாவின்படி, மகளிர் இடஒதுக்கீட்டை அமலாக்க ஏதுவாக மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையை 543-இல் 850 வரை உயர்த்தவும் (மாநிலங்களில் அதிகபட்சமாக 815, யூனியன் பிரதேசங்களில் அதிகபட்சமாக 35 இடங்கள்), சட்டப் பேரவைகளிலும் உரிய அதிகரிப்பை மேற்கொள்ளவும் முன்மொழியப்பட்டுள்ளது.
- நாட்டில் மக்களவை இடங்களின் எண்ணிக்கையை நிர்ணயிக்கும் அரசமைப்புச் சட்டத்தின் 81-ஆவது பிரிவில் திருத்தம் மேற்கொள்வது, மசோதாவின் முக்கிய அம்சமாகும்.
- தொகுதி கடைசியாக மறுசீரமைப்புக்கு மேற்கொள்ளப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பு விவரங்கள் (2011) பயன்படுத்தப்படும்; சுழற்சி முறையில் மகளிருக்கான தொகுதிகள் ஒதுக்கப்படும் என்பது உள்ளிட்ட அம்சங்களும் இடம்பெற்றுள்ளன.
- 'தொகுதிகளின் இறுதி எண்ணிக்கையை மறுசீரமைப்பு ஆணையமே தீர்மானிக்கும்; 850 என்பது அதிகபட்ச எண்ணிக்கையே. விகிதாசார பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் தொகுதிகள் ஒதுக்கப்படும்' என்று தேசிய ஜனநாயக கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன.

(vi) மசோதாக்கள் என்னென்ன?:

- மகளிர் இடஒதுக்கீட்டை விரைவாக அமலாக்க வகைசெய்யும் அரசமைப்புச் சட்டத்தின் 131-ஆவது திருத்த மசோதா-2026, தொகுதி மறுசீரமைப்பு மசோதா-2026, சட்டப்பேரவையுடன் கூடிய யூனியன் பிரதேசங்களில் இச்சட்டங்களை அமல்படுத்த வழிவகுக்கும் யூனியன் பிரதேசங்கள் சட்டத் திருத்த மசோதா-2026 என மூன்று மசோதாக்கள் மக்களவையில் அறிமுகம் செய்ய பட்டியலிடப்பட்டுள்ளன.
- முதல் இரு மசோதாக்களை மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன்ராம் மேக்வாலும், மூன்றாவது மசோதாவை அமித் ஷாவும் அறிமுகம் செய்வர். விவாதத்துக்கு 18 மணிநேரம் ஒதுக்கப்பட்டுள்ளதால், வெள்ளிக்கிழமை வரை தொடர வாய்ப்புள்ளது. மக்களவையில் மசோதாக்கள் நிறைவேறிய பிறகு மாநிலங்களவையில் எடுத்துக்கொள்ளப்படும் என்று அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(vii) சிறப்பு பெரும்பான்மை தேவை:

- பிற மசோதாக்களை நிறைவேற்ற சாதாரண பெரும்பான்மை போதும் என்ற நிலையில், அரசமைப்புச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்ற இரு அவைகளிலும் சிறப்பு பெரும்பான்மை அவசியம். அதாவது, மசோதாவுக்கு ஆதரவாக மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்குகள் தேவை; அத்துடன், அவையில் பங்கேற்கும் உறுப்பினர்களில் மூன்று இரு பங்கு வாக்குகள் கிடைத்தால் மட்டுமே மசோதா நிறைவேறும்.
- மக்களவையில் ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 292 உறுப்பினர்களும், எதிர்க்கட்சிகளுக்கு 233 உறுப்பினர்களும் உள்ளனர். மசோதாவுக்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவைப் பெற அதிகாரபூர்வமற்ற முறையில் அரசுத் தரப்பில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

2. 'ஐ.நா.சபையின் அதிகாரத்தையும், நம்பகத்தன்மையையும் மீண்டும் நிலைநாட்ட சீனாவும், ரஷியாவும் இணைந்து செயல்பட வேண்டும்' என்று சீன அதிபர் ஷி ஜின்பிங் வலியுறுத்தியுள்ளார்.

(i) ஈரான் மீதான போர், வெனிசுலா ஆட்சிமாற்றம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் இரு நாடுகளும் தங்களின் ஒத்துழைப்பைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று அதிபர் ஷி ஜின்பிங் கேட்டுக் கொண்டார்.

(ii) சீனாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ரஷிய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லாவ்ரோவைச் சந்தித்தபோது அதிபர் ஷி ஜின்பிங் இவ்வாறு தெரிவித்தார்.

(iii) இச்சந்திப்பில் அவர் மேலும் பேசியதாவது:

- அமெரிக்காவின் போக்கைத் தன்னிச்சையான தடுத்து நிறுத்தி, ஐ.நா. சபையின் அதிகாரத்தையும், நம்பகத் தன்மையையும் மீட்டெடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.
- சர்வதேச அளவில் ஒரு நியாயமான மற்றும் சமநிலையான ஒழுங்குமுறையை உருவாக்க வேண்டியது அவசியம். இதையொட்டி, பிரிக்ஸ், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ்சிஓ) ஆகிய கூட்டமைப்புகளில் சீனாவும் ரஷியாவும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றார்.
- ஹோர்முஸ் நீரிணை முடக்கம் காரணமாக உலக அளவில் ஏற்பட்டுள்ள கச்சா எண்ணெய் தட்டுப்பாட்டைச் சமாளிக்க, ரஷியா உதவத் தயாராக இருப்பதாக

செர்கெய் லாவ் ரோவ் தெரிவித்தார். குழாய்கள் மூலம் சீனா மற்றும் இதர நாடுகளுக்குத் தடையின்றி எரிபொருள் விநியோகம் செய்ய ரஷியாவால் முடியும் என்றும் அவர் உறுதியளித்தார்.

- இந்த ஆண்டு இறுதியில் இந்தியாவில் நடைபெறவுள்ள பிரிக்ஸ் உச்சிமாநாட்டில், வளர்ந்து வரும் நாடுகளின் நலன்களைப் பாதுகாக்கவும், பன்னாட்டுக் கொள்கையை வலுப்படுத்தவும் ரஷியா, சீனா நாடுகள் முக்கிய முன்னெடுப்புகளை எடுக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

3. நாட்டின் சர்க்கரை உற்பத்தி, நடப்பு 2025-26- ஆம் ஆண்டு சர்க்கரை பருவத்தில் (அக்டோபர்-செப்டம்பர்) இதுவரை 7.70 சதவீதம் உயர்ந்து, 2.74 கோடி டன்னாக அதிகரித்துள்ளது.

(i) கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் சர்க்கரை உற்பத்தி 2.54 கோடி டன்னாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

(ii) நாடு முழுவதும் கரும்பு அரைவையில் ஈடுபட்ட மொத்தமுள்ள 541 சர்க்கரை ஆலைகளில், தற்போது 21 ஆலைகளில் மட்டும் அரவைப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக என்று தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலைகளின் கூட்டமைப்பு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(iii) ஏனெனில், நடப்பு ஆண்டு பருவத்தில் இதுவரை கிடைத்துள்ள உற்பத்தியானது, கடந்த 2024–25 முழு பருவத்தின் மொத்த உற்பத்தியான 2.62 கோடி டன்னை ஏற்கெனவே கடந்துவிட்டது. மகாராஷ்டிரம், கர்நாடக மாநிலங்களில் கரும்பு அரைவை மற்றும் சர்க்கரை உற்பத்தி அதிகரித்ததே இதற்கு முக்கியக் காரணமாகக் கூறப்படுகிறது.

(iv) நாட்டின் முன்னணி சர்க்கரை உற்பத்தியாளரான மகாராஷ்டிரத்தில் மட்டும் சர்க்கரை உற்பத்தி 23 சதவீதம் உயர்ந்து, 99.2 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டு 80.6 லட்சம் டன்னாக இருந்தது.

(v) இதேபோல், 3-ஆவது பெரிய உற்பத்தியாளரான கர்நாடகத்தில் உற்பத்தி 16.70 சதவீதம் உயர்ந்து, 47.1 லட்சம் டன்னை எட்டியுள்ளது. இருப்பினும், 2-ஆவது இடத்தில் உள்ள உத்தர பிரதேசத்தில் சர்க்கரை உற்பத்தி சுமார் 2 சதவீதம் சரிந்து, 89.2 லட்சம் டன்னாகக் குறைந்துள்ளது. இப்பருவத்தில் கரும்பிலிருந்து தயாரிக்கப்பட்ட சர்க்கரையின் அளவான சர்க்கரை மீட்பு விகிதம் கடந்த ஆண்டின் 9.37 சதவீதத்திலிருந்து 9.55 சதவீதமாக உயர்ந்துள்ளது.

4. மத்திய கிழக்கு போரால் சர்வதேச அளவில் பொருளாதார வளர்ச்சி குறையும்; பணவீக்கம் அதிகரிக்கும் என்று சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்) எச்சரித்துள்ளது. இது தொடர்பாக ஐஎம்எஃப் அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

(i) 2026-ஆம் ஆண்டு சர்வதேச பொருளாதார வளர்ச்சி 3.3 சதவீதமாக இருக்கும் என்று கடந்த ஜனவரியில் கணிக்கப்பட்டிருந்தது. இப்போது அது 3.1 சதவீதமாகக் குறையும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(ii) இதற்கு மத்திய கிழக்கு போர் முக்கியக் காரணமாகும். அங்குள்ள சூழல் மேம்படாமல் நிலைமை மேலும் மோசமானால், சர்வதேச அளவில் பொருளாதார பாதிப்புகள் அதிகரிக்கும் வாய்ப்பும் உள்ளது.

(iii) சர்வதேச அளவில் விலைவாசி உயர்வு 3.8 சதவீதமாக இருக்கும் என்று முன்பு கணிக்கப்பட்டிருந்தது. இப்போது 4.4 சதவீதம் வரை உயரும் எனத் தெரிய வந்துள்ளது.

ஏனெனில், கச்சா எண்ணெய் விலை உயர்வு அனைத்து நாடுகளிலும் பல்வேறு பொருள்களின் விலை உயர்வுக்கு வழிவகுக்கும்.

(iv) அதேநேரத்தில் தொழில்நுட்ப ரீதியாக ஏற்பட்டு வரும் வளர்ச்சி, முக்கியமாக தரவு மையங்கள், செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) ஆகிய வற்றில் பெரிய அளவில் முதலீடுகள் அதிகரிப்பது அத்துறை சார்ந்த செயல்திறனை அதிகரிக்கும். இது உலகப் பொருளாதாரத்தையும் வலுப்படுத்தும் என்று கூறப்பட்டுள்ளது.

(v) 191 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐஎம்எஃப், சர்வதேச அளவில் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பது, நிதி ஸ்திரத்தன்மையை உருவாக்குவது, உலக அளவில் வறுமையைக் குறைப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு செயல்படுகிறது.

5. மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியாவை, உலக ஊக்கமருந்து தடுப்பு முகமை (வாடா) தலைவர் விடோல்டு பாங்கா சந்தித்துப் பேசினார். உலகத் தரத்துக்கு இணையான, ஊக்கமருந்து தடுப்பு நடவடிக்கைகளை திறம்பட செயல்படுத்துவது தொடர்பாக அவருடன் ஆலோசித்த பாங்கா, மத்திய புலனாய்வு அமைப்பின் (சிபிஐ) சிறப்பு இயக்குநர் மனோஜ் சசிதர், தேசிய ஊக்கமருந்து தடுப்பு முகமை (நாடா) அதிகாரிகள் ஆகியோருடனும் பேச்சு நடத்தினார்.

6. கேண்டிடேட்ஸ் செஸ்போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியாவின் ஆர்.வைஷாலி சாம்பியன் ஆனார். இதன் மூலமாக, உலக மகளிர் செஸ் சாம்பியன் பட்டத்துக்காக, நடப்பு சாம்பியனான சீனாவின் ஜூ வென்ஜுனுடன் மோதும் போட்டியாளராக அவர் தேர்வாகியிருக்கிறார்.

7. இரு முறை உலக சாம்பியன், இரு முறை ஒலிம்பிக் சாம்பியன் பட்டம் வென்ற டென்மார்க் பாட்மின்டன் வீரர் விக்டர் அக்ஸெல்சென் (32), ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

(i) 2017, 2022 உலக சாம்பியன்ஷிப்களிலும், 2021 டோக்கியோ, 2024 பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளிலும் விக்டர் அக்ஸெல்சென் சாம்பியன் ஆனது குறிப்பிடத்தக்கது. 3 முறை ஐரோப்பிய சாம்பியன் பட்டமும் வென்றுள்ள அவர், உலகின் நம்பர் 1 வீரராக தொடர்ந்து 183 வாரங்கள் நிலைத்ததும் நினைவு கூரத்தக்கது.

8. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் ‘வீட்டோ' அதிகாரத்துடன் நிரந்தர உறுப்பினராக புதிய நாடுகள் சேர்க்கப்பட வேண்டும், இல்லையெனில் சீர்திருத்தத்தால் பயன் இருக்காது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

(i) ஐ.நா.வில் மிகவும் சக்திவாய்ந்த அமைப்பாக ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் கருதப்படுகிறது. இதில் அமெரிக்கா, ரஷியா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா ஆகிய 5 நாடுகள் 'வீட்டோ' அதிகாரம் கொண்ட நிரந்தர உறுப்பினர்களாகவும், மேலும் 10 நாடுகள் ‘வீட்டோ' அதிகாரமில்லாத தற்காலிக உறுப்பினர்களாகவும் உள்ளன.

(ii) இந்த கவுன்சிலில் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும், நிரந்தர உறுப்பினர்களாக தங்களையும் சேர்க்க வேண்டும் என இந்தியா, ஜெர்மனி, ஜப்பான், பிரேஸில் உள்ளிட்ட நாடுகள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றன.

(iii) இந்தச் சீர்திருத்தம் தொடர்பாக நியூயார்க்கில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் ஐ.நா.வுக்கான இந்திய தூதர் பர்வதனேனி ஹரீஸ் பேசியதாவது:

- ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் புதிய உறுப்பினர்களாகச் சேர்க்கப்படும் நாடுகளுக்கு 'வீட்டோ' அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் அல்லது 'வீட்டோ' அதிகாரம்

அளிக்கப்படக் கூடாது என்பது குறித்து விவாதிப்பது, ஏற்கெனவே நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்கு சிக்கலை ஏற்படுத்தும். ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் என்று மிகப்பெரிய கருத்தொற்றுமை நிலவுகிறது.

- ஐ.நா.சபை ஏற்படுத்தப்பட்டபோது, 80 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்பு இது. இந்தக் கட்டமைப்பால், தற்காலிக புவியியல் - அரசியல் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது.
- ஐ.நா.சபை ஏற்படுத்தப்பட்ட பிறகு, ஒரேயொரு முறை பாதுகாப்பு கவுன்சிலில் கடந்த 1960-ஆம் ஆண்டில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அப்போது நிரந்தர உறுப்பினர்களாக 5 நாடுகளும், தற்காலிக உறுப்பினர்களாக 6 நாடுகளும் இருந்தன. இதில் தற்காலிக உறுப்பினர்கள் எண்ணிக்கை 10-ஆக அதிகரிக்கப்பட்டது.
- ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்படுகையில், புதிதாக நிரந்தர உறுப்பினர்களாக சேர்க்கப்படும் நாடுகளுக்கு 'வீட்டோ' அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்றார்.

9. இந்தியா-அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த அடுத்த வாரம் இந்திய குழு அமெரிக்கா செல்ல உள்ளது.

(i) இந்தியா-அமெரிக்கா இடையிலான இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தின் முதல் கட்டத்துக்கான செயல்திட்டத்தை கடந்த பிப்ரவரியில் இருநாடுகளும் இறுதி செய்தன. இந்தச் செயல் திட்டத்தின்படி, இந்தியப் பொருள்கள் மீதான அமெரிக்காவின் வரி 18 சதவீதமாக குறைக்க அந்நாடு ஒப்புக்கொண்டது. இந்த ஒப்பந்தம் தொடர்பாக மத்திய வர்த்தக துறைச் செயலர் ராஜேஷ் அக்ரவால் செய்தியா ளர்களிடம் புதன்கிழமை கூறியதாவது:

- வர்த்தக ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்த ஏப்.20-ஆம் தேதி இந்திய குழு அமெரிக்கா செல்கிறது. ஒப்பந்தம் தொடர்பாக மூன்று முதல் நான்கு மாதங்கள் இடைவெளிக்குப் பின்னர், இருநாட்டு குழுக்களும் நேரடியாகச் சந்திக்கின்றன. சட்டபூர்வமாக வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய இருதரப்பும் முனைப்புக் காட்டி வருகின்றன.
- இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் வர்த்தக நடைமுறைகளால் அமெரிக்க உற்பத்திக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பை கண்டறியும் நோக்கில், அந்நாட்டின் வர்த்தகச் சட்டம் 1974- இன் 301-ஆவது பிரிவின் கீழ், அமெரிக்கா தொடங்கியுள்ள விசாரணை குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று தெரிவித்தார்.

10. சமீபத்திய நாடாளுமன்ற அறிக்கைகள் மற்றும் சர்வதேச ஆய்வுகளின் அடிப்படையில், காற்று மற்றும் நீர் மாசுபாடு ஆகிய இரட்டை அச்சுறுத்தல்கள் குறித்த பகுப்பாய்வு.

(i) நீர் மாசுபாடு: இந்திய மாநில வாரியான பகுப்பாய்வு -

இந்தியாவில் நிலத்தடி நீரின் பேரழிவுமிக்க நிலை குறித்து, மத்திய ஜல் சக்தி அமைச்சகத்திற்கான நாடாளுமன்ற நிலைக்குழு (2026–27) சமர்ப்பித்த அறிக்கை.

- நாடு முழுவதும் உள்ள 4,949 கிராமங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளைப் பயன்படுத்தி இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
- பின்வரும் எட்டு மாநிலங்களில் உள்ள நிலத்தடி நீர் கடுமையாக மாசுபட்டுள்ளதாகவும், குடிப்பதற்குத் தகுதியற்றது என்றும் அந்த அறிக்கை குறிப்பாக எச்சரிக்கிறது: அசாம், பீகார், கேரளா, ஒடிசா, பஞ்சாப், ராஜஸ்தான், திரிபுரா மற்றும் மேற்கு வங்கம்.

- நிலத்தடி நீர் மாசுபாட்டின் மிகத் தீவிரமான அளவுகளால் பாதிக்கப்பட்டுள்ள மாநிலங்களாக ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப் ஆகியவை அடையாளம் காணப்பட்டுள்ளன.
- நச்சுத்தன்மை வாய்ந்த மாசுப்பொருட்கள்: சேகரிக்கப்பட்ட மாதிரிகள் ஆபத்தான கன உலோகங்கள் மற்றும் வேதிப்பொருட்களின் இருப்பை உறுதிப்படுத்தின; அவற்றுள் சில:
- பாதரசம் (Mercury)
- யுரேனியம்
- செலினியம்
- காட்மியம்
- ஃப்ளோரைடு மற்றும் நைட்ரேட்.
- நிலத்தடி நீரை வரம்பிற்கு மீறி உறிஞ்சுவது (இதனால் இயற்கையான நீரூற்றுகள் செயலிழக்கின்றன) மற்றும் தொழிற்சாலைகளின் வேதியியல் கழிவுகளைச் சுத்திகரிக்காமலே ஆறுகள் மற்றும் ஓடைகளில் வெளியேற்றுவது ஆகியவையே இதற்கான முதன்மையான காரணங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

(ii) காற்று மாசுபாடு: உலகளாவிய மற்றும் நாடு வாரியான உண்மைகள்

உலகளாவிய காற்றின் தரத்தைக் கண்காணிக்கும் சுவிட்சர்லாந்து சார்ந்த அமைப்பான "IQ Air"-இடமிருந்து பெறப்பட்ட தரவுத் தகவல்கள்.

- தென் அரைக்கோளத்தில் அமைந்துள்ள நாடுகள் மிகக் கடுமையான காற்று மாசுபாடு சவால்களை எதிர்கொள்வதாக இந்த அமைப்பு குறிப்பிடுகிறது.
- இந்தியாவுடன் சேர்த்து, காற்று மாசுபாட்டின் மிக உயர்ந்த அளவுகளைக் கொண்ட பிற நாடுகள் பின்வருமாறு:
- பாகிஸ்தான்.
- வங்கதேசம்.
- கஜகஸ்தான்.
- சாட்.
- காங்கோ.
- நகர்ப்புறம் - கிராமப்புறம் இடையிலான வேறுபாடு: சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்கள் நீர் மாசுபாட்டால் அதிகம் பாதிக்கப்படுகின்றன; அதே வேளையில், பெருநகரங்கள் மற்றும் மாநகராட்சிகள் காற்று மாசுபாட்டின் முழுத்தாக்கத்தையும் எதிர்கொள்கின்றன.

(iii) சுற்றுச்சூழல் நெருக்கடி குறித்த காலவரிசைப் பகுப்பாய்வு

- கடந்த 10 ஆண்டுகள்: தொழிற்சாலைக் கழிவுகளை வெளியேற்றுவதற்கு முன்பாகவே அவற்றைச் சுத்திகரிப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது; இருப்பினும், நிலத்தடி நீருக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பைச் சரிசெய்வதற்கு இந்த முயற்சிகள் போதுமானதாக அமையவில்லை.
- கடந்த 5 ஆண்டுகள்: இக்காலகட்டத்தில், நிலத்தடி நீர், குளங்கள் மற்றும் ஏரிகளில் ஃப்ளோரைடு மற்றும் நைட்ரேட் அளவுகள் கணிசமாக அதிகரித்துள்ளதாகப் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.
- தற்போதைய காலகட்டம் (2026–2027): நிலத்தடி நீரை வரம்பிற்கு மீறி உறிஞ்சுவதால், இயற்கையான நிலத்தடி நீரூற்றுகள் "செயலிழந்து" வருவதாகக் குறிப்பிட்டு, நாடாளுமன்ற நிலைக்குழு தனது அவசர எச்சரிக்கையை விடுத்துள்ளது.
- 2026-ஆம் ஆண்டின் நெருக்கடி: தற்போதைய மேற்கு ஆசியப் போர், உலகத்தின் கவனத்தைத் திசைதிருப்பியிருப்பதால், சுற்றுச்சூழல் சார்ந்த இச்சிக்கல்களின் மீது

செலுத்தப்பட வேண்டிய கவனம் மேலும் சிக்கலடைந்துள்ளது.

(iv) அடிப்படை காரணங்களும் விளைவுகளும்

- காற்று மாசுபாட்டிற்கான காரணிகள்: தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் நச்சுப் புகை, புதைபடிவ எரிபொருட்களால் இயங்கும் வாகனங்கள், குளிரூட்டிகள் (AC) போன்ற மின்னணுச் சாதனங்களின் பரவலான பயன்பாடு மற்றும் பசுமைப் பரப்புகளின் பற்றாக்குறை ஆகியவை காற்று மாசுபாட்டிற்கான முதன்மையான காரணங்களாக அமைகின்றன.
- தூய காற்றும் தூய நீரும் மனித வாழ்வின் இன்றியமையாத இரண்டு தேவைகளாகும். இந்த அடிப்படைத் தூண்களே சீர்குலையும்போது, அது மக்களின் அடிப்படை ஆரோக்கியம், மனிதவளம் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றின் வீழ்ச்சிக்கு வழிவகுக்கிறது.

11. இந்தியாவின் தற்போதைய தேர்தல் முறை மற்றும் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம்.

(i) உலகளாவிய கட்சி முறைகளின் பகுப்பாய்வு

- இரு-கட்சி முறை: அமெரிக்கா போன்ற நாடுகள் பின்பற்றும் முறை; இங்கு ஜனநாயகக் கட்சி (Democratic Party) மற்றும் குடியரசுக் கட்சி (Republican Party) என இரண்டு முக்கியக் கட்சிகள் மட்டுமே அதிகாரத்திற்காகப் போட்டியிடுகின்றன.
- பல-கட்சி முறை: இந்தியா போன்ற நாடுகள் பின்பற்றும் முறை; இங்குப் பலதரப்பட்ட கட்சிகள் தேர்தலில் போட்டியிடுகின்றன. உதாரணமாக, தற்போதைய தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் 30-க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் போட்டியிடுகின்றன.

(ii) பல-கட்சி முறையின் நிறைகளும் குறைகளும்

நிறைகள்:

- வாக்காளர்கள் தங்கள் கருத்துக்களைச் சிறப்பாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளர்களை, பரந்த அளவிலான தேர்வுகளிலிருந்து தேர்ந்தெடுப்பதற்கு இது வழிவகுக்கிறது.
- பல்வேறு சமூகப் பிரிவுகளின் மாறுபட்ட கருத்துக்கள் அரசாங்கத்தில் பிரதிபலிக்கப்படுவதை இது உறுதி செய்கிறது.
- இது ஒரே கட்சியின் ஆதிக்கத்தைத் தடுத்து, கூட்டணி அரசாங்கங்கள் மூலம் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள வழிவகுக்கிறது.
- சிறிய கட்சிகள் தங்கள் குரலைப் பதிவு செய்யவும், சமச்சீரான முடிவெடுக்கும் செயல்முறைகளுக்குப் பங்களிக்கவும் இது வாய்ப்பளிக்கிறது.

குறைகள்:

- கூட்டணிப் பங்காளிகளிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால், இது அரசாங்கத்தின் நிலையற்றத்தன்மைக்கு வழிவகுக்கும்.
- கூட்டணிக் கட்சிகளுக்கிடையிலான சித்தாந்த வேறுபாடுகள் அடிக்கடி முரண்பாடுகளை உருவாக்கக்கூடும்.
- பல கட்சிகளுக்கிடையே ஒருமித்த கருத்து எட்டப்பட வேண்டியிருப்பதால், முடிவெடுக்கும் செயல்முறைகள் பெரும்பாலும் தாமதமாகின்றன.
- இது "அரசியல் பேரம் பேசுதலுக்கு" (political bargaining) வழிவகுக்கிறது; இதில் கட்சிகள் தங்கள் கூட்டணியைத் தக்கவைத்துக்கொள்வதற்காகத் தங்கள் அடிப்படை அரசியல் கொள்கைகளைக் கூடத் தியாகம் செய்ய நேரிடலாம்.

(iii) தற்போதைய "முதலில் வருபவருக்கே வெற்றி" (First-Past-The-Post - FPTP) முறையின் விமர்சனம்

இந்தியாவில் தற்போது நடைமுறையில் உள்ள வாக்குப்பதிவு முறையில் ஒரு அடிப்படை குறைபாடு உள்ளது; இம்முறையில், ஒரு வேட்பாளர் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றாரா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல், அதிக எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்றவரே வெற்றியாளராக அறிவிக்கப்படுகிறார்:

- பதிவான மொத்த வாக்குகளில் பெரும்பான்மையை (50%-க்கும் அதிகம்) பெறாமலேயே ஒரு வேட்பாளர் வெற்றியாளராக அறிவிக்கப்பட முடியும்.
- புள்ளியியல் ரீதியான சமத்துவமின்மை: வேட்பாளர் 'A' 35% வாக்குகளையும், வேட்பாளர் 'B' 32% வாக்குகளையும், வேட்பாளர் 'C' 33% வாக்குகளையும் பெறும் ஒரு சூழலைக் கருதுவோம். 65% வாக்காளர்கள் வேட்பாளர் 'A'-க்கு எதிராக வாக்களித்திருந்த போதிலும், அவரே வெற்றியாளராக அறிவிக்கப்படுகிறார்.
- சிறிய கட்சிகளின் அடையாள இழப்பு: FPTP முறையின் கீழ், சிறிய கட்சிகள் சட்டமன்றத்தில் தங்களுக்கு ஏதேனும் ஒரு பிரதிநிதித்துவம் கிடைப்பதை உறுதிசெய்யும் பொருட்டு, இடப் பகிர்வுக்காகப் பெரிய கட்சிகளின் "வாசலில் காத்திருக்க" வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படுகின்றன; இது அவர்களின் சுதந்திரமான அரசியல் அடையாளம் சிதைந்துபோக வழிவகுக்கிறது.

(iv) முன்மொழியப்பட்ட மாற்று முறை: விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் (PR)

ஒரு கட்சி மாநிலம் அல்லது நாடு முழுவதும் பெறும் மொத்த வாக்கு சதவீதத்தின் அடிப்படையில் சட்டமன்ற இடங்கள் ஒதுக்கப்படும் ஒரு முறை இதுவாகும்:

- நேரடித் தொடர்பு: ஒரு அரசியல் கட்சி அனைத்துத் தொகுதிகளிலும் (எ.கா., தமிழ்நாட்டில் உள்ள 234 இடங்கள்) மொத்த வாக்குகளில் 40 சதவீதத்தைப் பெற்றால், அக்கட்சிக்கு சட்டமன்றத்தில் உள்ள மொத்த இடங்களில் 40 சதவீதம் தானாகவே ஒதுக்கப்படும்.
- சின்னம் சார்ந்த வாக்களிப்பு: இம்முறையில், வாக்காளர்கள் பெரும்பாலும் தனிப்பட்ட வேட்பாளருக்கு வாக்களிப்பதற்குப் பதிலாக, ஒரு கட்சியின் சின்னத்திற்கே வாக்களிக்கின்றனர்; இது சட்டமன்றமானது மக்களின் கூட்டு விருப்பத்தை மிகத் துல்லியமாகப் பிரதிபலிப்பதை உறுதி செய்கிறது.
- விளிம்புநிலை மக்களின் அதிகாரமளித்தல்: இம்முறையானது, சிறிய கட்சிகளும் விளிம்புநிலை மக்களும், பெரிய கட்சிகளுடனான கூட்டணியில் இணையத் தங்கள் சித்தாந்தங்களை விட்டுக்கொடுக்க வேண்டிய அவசியமின்றி, தாங்கள் பெற்ற உண்மையான வாக்கு சதவீதத்தின் அடிப்படையில் சட்டமன்றத்திற்குள் நுழைய வழிவகை செய்கிறது.

(v) உலகளாவிய சூழலும் பரிந்துரைகளும்

- அமெரிக்கா, ஜெர்மனி, நெதர்லாந்து மற்றும் இஸ்ரேல் போன்ற நவீன நாடுகள் ஏற்கனவே விகிதாச்சாரப் பிரதிநிதித்துவத்தின் பல்வேறு வடிவங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன.
- இந்தியாவின் ஜனநாயக ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு, இந்தியா விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறைக்கு மாற வேண்டியதன் அவசியத்தை முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் ஜே.எம். லிங்டோவ் (J.M. Lyngdoh) அதிகாரப்பூர்வமாக வலியுறுத்தியுள்ளார்.
- பன்முகத்தன்மையின் அவசியம்: குறைவான இனக்குழுக்களைக் கொண்ட

நாடுகளில் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், பல மொழிகள், மதங்கள் மற்றும் கலாச்சாரங்களைக் கொண்ட இந்தியாவைப் போன்ற ஒரு பன்முகத்தன்மை வாய்ந்த நாட்டிற்கு இம்முறை மிகவும் இன்றியமையாததாகும்.

விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைக்கு மாறுவது, இடப் பங்கீடு குறித்த தொடர்ச்சியான சர்ச்சைகளை அகற்றி, 'ஒவ்வொரு வாக்கும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவதை' உறுதி செய்யும். இந்த அடிப்படை நடைமுறைச் சீர்திருத்தம் குறித்து ஒரு தீவிர விவாதத்தைத் தொடங்குமாறு தேர்தல் ஆணையமும் அறிஞர்களும் வலியுறுத்தப்பட வேண்டும்